

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் காணொலி வாயிலாக திருச்சிராப்பள்ளி டி.வி.எஸ் டோல்கேட் அருகில் உலக தரத்திலான மாபெரும் பெருந்தலைவர் காமராஜர் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு (21.03.2025) அன்று அடிக்கல் நாட்டி அதனைத் தொடர்ந்து மிக விரைவாக நடைபெற்று வரும் கட்டிடப் பணிகளை தொடர்ந்து ஆய்வு செய்து ஆலோசனைகளை வழங்கி வருகின்றார் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி. திருச்சிராப்பள்ளி, டி.வி. எஸ். டோல்கேட் பகுதியில் ரூபாய் 290 கோடி மதிப்பீட்டில் உலக தரத்திலான மாபெரும் பெருந்தலைவர் காமராஜர் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைய உள்ளது. நிகழ்வின் போது மண்டல குழு தலைவர் மு. மதிவாணன் மற்றும் கட்டிட பொறியாளர்கள் அரசு உயர் அதிகாரிகள் வல்லுநர்கள் உடன் இருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையிலிருந்து காணொலி காட்சி வாயிலாக நகரப் பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளில் விரிவாக்கம் செய்து முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம் ஆடுதுறை பேரூராட்சி ஸ்ரீ குமரகுருபரர் சுவாமிகள் அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளியில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு காலை உணவினை வழங்கி தானும் மாணவ, மாணவியர்களுடன் சேர்ந்து உட்கொண்டார். மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம், முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், பேரூராட்சி தலைவர் ம.க.ஸ்டாலின், கும்பகோணம் சார் ஆட்சியர் ஹிருத்யா எஸ்.விஜயன், உதவி ஆட்சியர் எம்.கார்த்திக் ராஜா மற்றும் பலர் உடன் உள்ளனர்.

### புதன், சனி, ஞாயிற்றுக்கிழமைகளில்

# தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் ஒருநாள் பெருமாள் கோவில்கள் சுற்றுலா!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

சென்னை, ஆக. 28-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிக் காட்டுதலின்படி சுற்றுலாத்துறை சார்பில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் ஆன்மிக சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில் ஆடி மாதத்தில் ஒரு நாள் அம்மன் கோவில் சுற்றுலா நடத்தப்பட்டது. இந்த சுற்றுலாவானது பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றதை தொடர்ந்து, சென்னை, மதுரை, திருச்சி மற்றும் தஞ்சாவூர் ஆகிய நகரங்களில் உள்ள பிரசித்தி பெற்ற பெருமாள் திருக்கோவில்களை தரிசனம் செய்யும் வகையில் காலை 8.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை ஒரு நாள் புரட்டாசி பெருமாள் கோவில்கள் தொகுப்பு சுற்றுலா 17.09.2025 அன்று முதல் புதன், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இயக்கப்படும் என சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.



**ஒருநாள் வைணவ திருக்கோவில் சுற்றுலா சென்னை–1 (ஒரே நாளில் 6 பெருமாள் திருக்கோவில்கள்)**

சென்னை திருவல்லிக்கேணி சுற்றுலா வளாகத்திலிருந்து காலை 8.30 மணிக்கு புறப்பட்டு பார்த்தசாரதி திருக்கோவில், திருவல்லிக்கேணி - அஷ்டலக்ஷ்மி கோவில் திருக்கோவில், பெசன்ட் நகர் - நித்தியகல்யாண பெருமாள் திருக்கோவில், திருவிடந்தை - ஸ்தல சயன பெருமாள் திருக்கோவில், மாமல்லபுரம் - பாடலாத்ரி நரசிம்மர் திருக்கோவில், சிங்கபெருமாள் கோவில் - நீர்வண்ணப் பெருமாள் திருக்கோவில், திருநீர்மலை ஆகிய திருக்கோவில்களை கண்டு தரிசனம் செய்து வரும் வகையில் சிறப்பான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சுற்றுலாவிற்கான கட்டணம் ரூ.1000/- மேலும், மதிய உணவு, கோவில்களின் பிரசாதம் மற்றும் சிறப்பு விரைவு தரிசனம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**ஒருநாள் வைணவ திருக்கோவில் சுற்றுலா சென்னை–2 (ஒரே நாளில் 7 பெருமாள் திருக்கோவில்கள்)**

சென்னை திருவல்லிகேணி சுற்றுலா வளாகத்திலிருந்து காலை 8.30 மணிக்கு புறப்பட்டு பார்த்தசாரதி திருக்கோவில், திருவல்லிக்கேணி - நீர்வண்ணப் பெருமாள் திருக்கோவில், திருநீர்மலை - பொன்னுசாமி பெருமாள் திருக்கோவில், திருமுல்லைவாயில் - வைத்திய வீரராகவ பெருமாள் திருக்கோவில், திருவள்ளூர் - ஆதிகேசவப் பெருமாள் திருக்கோவில், ஸ்ரீபெரும்புதூர் - வரதராஜப் பெருமாள் திருக்கோவில், பூந்தமல்லி ஆகிய திருக்கோவில்களை கண்டு தரிசனம் செய்து வரும்வகையில் சிறப்பான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சுற்றுலாவிற்கான கட்டணம் ரூ.1000/- மேலும், மதிய உணவு, கோவில்களின் பிரசாதம் மற்றும் சிறப்பு விரைவு தரிசனம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**ஒருநாள் வைணவ திருக்கோவில் சுற்றுலா – மதுரை**

மதுரை, ஓட்டல் தமிழ்நாடு, அழகர் கோயில் சாலையிலிருந்து புறப்பட்டு, கள்ளழகர் திருக்கோவில், அழகர் கோவில்- ஸ்ரீ யோக நரசிம்மர் பெருமாள் திருக்கோவில், ஒத்தகடை - காளமேகப் பெருமாள் திருக்கோவில், திருமோகூர் - சௌம்ய நாராயண பெருமாள் திருக்கோவில், திருகோஷ்டியூர் - வீர ராகவ பெருமாள், வண்டியூர்- கூடலழகர் பெருமாள் திருக்கோவில், மதுரை ஆகிய திருக்கோவில்களை கண்டு தரிசனம் செய்து வரும் வகையில் சிறப்பான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சுற்றுலாவிற்கான கட்டணம் ரூ.1400/- மேலும், மதிய உணவு, கோவில்களின் பிரசாதம் மற்றும் சிறப்பு விரைவு தரிசனம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒருநாள் வைணவ திருக்கோவில் சுற்றுலா - திருச்சி

ஓட்டல் தமிழ்நாடு, திருச்சியிலிருந்து புறப்பட்டு, அழகிய மணவாளன் பெருமாள் திருக்கோவில்,உறையூர் - அரங்கநாத சுவாமி திருக்கோ வில், ஸ்ரீரங்கம் - புருஷோத்தம பெருமாள் திருக்கோவில், உத்தமர் கோவில் - பிரசன்ன வெங்கடாசல பெருமாள் திருக்கோவில், குணசீலம் - பெருமாள் திருக்கோவில், தான் தோன்றிமலை ஆகிய திருக்கோவில்களை கண்டு தரிசனம் செய்து வரும் வகையில் சிறப்பான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சுற்றுலாவிற்கான கட்டணம் ரூ.1100/- மேலும், மதிய உணவு, கோவில்களின் பிரசாதம் மற்றும் சிறப்பு விரைவு தரிசனம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**ஒருநாள் வைணவ திருக்கோவில் சுற்றுலா – தஞ்சாவூர்**

ஓட்டல் தமிழ்நாடு, தஞ்சாவூரிலிருந்து புறப்பட்டு, சாபவிமோசன பெருமாள் திருக்கோவில், திருகண்டியூர் - சாரங்கபாணி பெருமாள் திருக்கோவில், கும்பகோணம் - உப்பிலியப்பன் பெருமாள் திருக்கோவில், திருநாகேஸ்வரம் - சீனிவாச பெருமாள் திருக்கோவில், நாச்சியார் கோவில் - சாரநாத பெருமாள் திருக்கோவில், திருச்சேறை - இராஜகோபாலசுவாமிதிருக்கோவில், மன்னார்குடி - கோதண்டராமர் திருக்கோவில், வடுவூர் ஆகிய திருக்கோவில்களை கண்டு தரிசனம் செய்து வரும் வகையில் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இச்சுற்றுலாவிற்கான கட்டணம் ரூ.1400/- மேலும், மதிய உணவு, கோவில்களின் பிரசாதம் மற்றும் சிறப்பு விரைவு தரிசனம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சுற்றுலாக்களில் பயணிக்கும் அனைவருக்கும் மதிய உணவு, அனைத்து கோவில்களின் பிரசாதம் மற்றும் சிறப்பு விரைவு தரிசனம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே சுற்றுலா பயணிகள், ஆன்மீக அன்பர்கள் இந்த அறிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட இந்த சுற்றுலாக்களுக்கு WWW.TTDCONLINE.COM என்ற இணையத்தில் பதிவு செய்து கொள்ளலாம். மேலும், விவரங்களுக்கு 180042531111, 044-25333333, 044-25333444 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிந்துகொள்ளலாம்.

## தி. மு. க. தொழிலாளர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி, மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. தொழிலாளர் அணியின் திருப்பூர் வடக்கு மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருப்பூர் வடக்கு மாவட்டம்

அமைப்பாளர் - எல்.ஐ.சி. அவினாசியப்பன் சுடுகாடு தோட்டம், தண்டுக்காரன் பாளையம், சேவூர், அவிநாசி, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் – 1) மா. வேல்முருகன் 3/375-14, சென்னியப்பன் நகர், பெருமாநல்லூர், திருப்பூர் - 641666. 2) ஆ. தண்டபாணி 3/2, காமாட்சியம்மன் கோவில் வீதி, குமரானந்தபுரம், திருப்பூர் - 641602. 3) கா. முத்துவேல்சாமி 2/163, பாளையக்காடு தோட்டம், சின்னஒட்டர்பாளையம், புஞ்சை தாமரை குளம், அவிநாசி, திருப்பூர் - 638460. 4) மு. சாமுவேல் 2/38/15, ஜி.என். கிருஷ்ணா நகர், பொங்குபாளையம், திருப்பூர் - 641666. 5) எம். பத்மநாபன் 3/478, அண்ணா நகர், ஆத்துப்பாளையம், திருப்பூர் - 641652.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 26-08-2025.

பிடிசி ஜி.செல்வராஜ்,
செயலாளர்
தி.மு.க. தொழிலாளர் அணி



திருப்பூர் கிழக்கு மாவட்டம், சென்னிமலை பேரூர் கழக செயலாளர் எஸ்.எம்.ராமசாமி ஆலோசனையின்படி பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர் அம்மாபாளையம் தி.ஆனந்தன் ஏற்பாட்டில் 30 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் சென்னிமலை ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.ஆர்.எஸ்.செல்வம் (மேற்கு), சி.பிரபு (கிழக்கு), மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் சென்னிமலை தி.சேகர், பேரூராட்சி தலைவர் ஸ்ரீதேவி அசோக், உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி இந்நாள் முன்னாள் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

### சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்

# அரவக்குறிச்சி கலிலூர் ரஹ்மான் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக.28-

அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் கலிலூர் ரஹ்மான் அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் கலிலூர் ரஹ்மான் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருத்த மடைந்தேன்.

2006-ஆம் ஆண்டு அரவக்குறிச்சி தொகுதியில் தி.மு.கழக. வேட்பாளராகப் போட்டியிட்டு, பெரும் வாக்கு வித்தியாசத்தில் வென்ற கலிலூர் ரஹ்மான் அவர்கள் தனது சிறந்த பணியால் தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்று விளங்கிய தோடு, சிறுபான்மையின மக்களின் நம்பிக்கையைப் பெற்றவராகவும் திகழ்ந்தார்.

கரூர் மாவட்டம், பள்ளப்பட்டியைச் சேர்ந்த கலிலூர் ரஹ்மான் அவர்கள், பள்ளப்பட்டி பேரூராட்சித் தலைவராகவும் இருமுறை பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. வகித்த பொறுப்புகளில் எல்லாம் திறம்படச் செயல்பட்ட அவரது மறைவு அரவக்குறிச்சி தொகுதி மக்களுக்கும், தமிழ் நாடெங்குமுள்ள சிறுபான்மைச் சமூகத்தினருக்கும் பெரும் இழப்பாகும்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினர், பொதுமக்கள், கழக உடன்பிறப்புகள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### பல்லாவரம் வடக்குப் பகுதி

# மாவட்டப் பிரதிநிதி குளத்துமேடு மு.நாகலிங்கம் மறைவு!

## டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் – இ.கருணாநிதி எம்.எல்.ஏ. அஞ்சலி!

பல்லாவரம், ஆக.28-

பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பல்லாவரம் வடக்கு பகுதியில் காஞ்சிபுரம் மாவட்ட கழகப் பிரதிநிதியாக இரவு பகலும் கழக வளர்ச்சிக்காக பாடுபட்ட குளத்து மேடு மு. நாகலிங்கம் 25.8.2018 அன்று இரவு 8 .00 மணி அளவில் இயற்கை எய்தினார்.

தகவல் அறிந்து கழகத் தோழர்கள் பெருந்திரளாக அஞ்சலி செலுத்தினார்கள் அதைத்தொடர்ந்து கழக பொருளாளர் மக்களவை குழு தலைவர் திருபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு அவர்களும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்களும் நேரில் வருகை தந்து நாகலிங்கத்தின் திருஉடல் மீது மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்.

அதைத் தொடர்ந்து மாவட்டக் கழக துணைச் செயலாளர் பல்லாவரம் இ. கருணாநிதி எம்.எல்.ஏ மாநகரச் செயலாளர் எஸ். ஆர். ராஜா எம்.எல்.ஏ தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி துணை மேயர் கோ. காமராஜ் மண்டல தலைவர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை வே. கருணாநிதி பகுதி கழகச் செயலாளர்இ. எஸ். பெர்னார்ட் ஏ.கே.கருணாகரன் பொதுக்குழு உறுப்பினர் மூ.ரஞ்சன் பகுதி கழக நிர்வாகிகள் அணிகளில் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்ட கழகச் செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் வட்டக் கழக நிர்வாகிகள் என ஏராளமான கழகத் தோழர்கள் அணி திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினார்கள் அதைத்தொடர்ந்து அன்னார் இல்லத்திலிருந்து புறப்பட்ட இறுதி ஊர்வலம் குளத்து மாநகர் தர்காசாலை வழியாக மலகானந்தபுரம் இடுகாடு சென்று அடைந்தது அங்கு அவரது மகன் வெற்றிச்செல்வன் இறுதி சடங்குகளை மேற்கொள்ள அன்னாரின் திரு உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது அன்னாருக்கு அமுதா என்ற ஒரு மகளும் உள்ளனர் அன்னாரின் மறைவு செய்து கேட்டு பல்லாவரம் தொகுதியில் உள்ள அனைத்து தோழர்களும் இரங்கல் செலுத்தி செலுத்தினார்கள்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

## தலைமைக் கழக அறிவிப்பு

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், ஆவுடையார்கோவில், பொன்பேத்தியைச் சேர்ந்த எஸ்.சுந்தரபாண்டியன் அவர்கள் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, **கழகத் தலைவர்** அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600018
நாள்- 26.08.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## தி.மு.க. தொண்டர் அணி

# மதுரை மாநகர் மாவட்டத் தலைவர் நியமனம்!

## தொண்டர் அணிச் செயலாளர் பெ. சேகர் அறிவிப்பு!

மதுரை மாநகர் மாவட்ட தொண்டர் அணி தலைவராக நியமிக்கப்பட்ட பி.ஆர். ராஜா அவர்கள், இலக்கிய அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால், அவரை மாவட்ட தொண்டர் அணி தலைவர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **மா.நீதிராஜன்,** (69, ராமவர்மா நகர் 2வது தெரு, கோ.புதூர், மதுரை 625007) அவர்கள் மதுரை மாநகர் மாவட்ட தொண்டர் அணி தலைவராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 26-08-2025.

மாஸ்டர் பெ.சேகர்,
செயலாளர்,
தி.மு.க. தொண்டர் அணி



புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் சகாய மாதா அரசு உதவி பெறும் பள்ளியில் முதலமைச்சர் தளபதி அவர்களின் காலை உணவுத் திட்டத்தை புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தொடங்கி வைத்தார். நிகழ்வில் கீரனூர் பேரூர் கழக செயலாளர் பி.அண்ணாதுரை, கே.எம்.கே.ரவிக்குமார், எம்.ஏ.எம்.இம்தியாஸ் மற்றும் பலர் உள்ளனர்.